

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

**இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள திமிரி மத்திய, திமிரி கிழக்கு, வாலாஜா தெற்கு, காவேரிப்பாக்கம் தெற்கு ஆகிய ஒன்றியங்களிலும், ஆற்காடு நகரத்திலும், கலவை, விளாப்பாக்கம், திமிரி, காவேரிப்பாக்கம் ஆகிய பேரூர்களிலும் தெருமுனைக் கூட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 20.06.2025 | நெமிலி மேற்கு ஒன்றியம் | மேலபுலம் புதூர், காட்டுப்பாக்கம். | வெ.ஆர்த்தி |
| 2, 3 | | பனப்பாக்கம் பேரூர் | பேருந்து நிலையம் அருகில் | வெ.ஆர்த்தி |
| 4 | | நெமிலி மேற்கு ஒன்றியம் | காட்டுப்பாக்கம் | வெ.ஆர்த்தி |
| 5 | | அரக்கோணம் மத்திய ஒன்றியம் | இச்சிப்புத்தூர் | சோக்காடு கென்னடி |
| 6 | | அரக்கோணம் மத்திய ஒன்றியம் | பெருங்களத்தூர், இந்திரா நகர். | சேர்க்காடு கென்னடி |
| 7, 8 | | இராணிப்பேட்டை நகரம் | எம்.எல்.ஏ. அலுவலகம் அருகில், சந்தை மைதானம். | எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம் |
| 9 | | வாலாஜா மத்திய ஒன்றியம் | வானாப்பாடி | எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம் |
| | 21.06.2025 | அரக்கோணம் நகரம் | பழனிப்பேட்டை | தூத்துக்குடி சரத்பாலா |
| 10, 11 | | அரக்கோணம் நகரம் | இந்திரா காந்தி சிலை அருகில் | தூத்துக்குடி சரத்பாலா |
| 12 | | நெமிலி மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், சித்தூர். | சேர்க்காடு கென்னடி |
| | | நெமிலி பேரூர் | பேருந்து நிலையம் | சேர்க்காடு கென்னடி |
| 13 | | நெமிலி மத்திய ஒன்றியம் | பேருந்து நிலையம், நாகவேடு. | சேர்க்காடு கென்னடி |
| 14 | 22.06.2025 | நெமிலி வடக்கு ஒன்றியம் | மேலேரி ஊராட்சி | இரா.தமிழ்வாணன் |
| 15 | | அரக்கோணம் கிழக்கு ஒன்றியம் | உரியூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| 16 | | அரக்கோணம் கிழக்கு ஒன்றியம் | அனந்தாபுரம் | தூத்துக்குடி சரத்பாலா |
| 17 | | தக்கோலம் பேரூர் | தேரடி | தூத்துக்குடி சரத்பாலா |
| 18 | | நெமிலி வடக்கு ஒன்றியம் | திருமால்பூர் | இரா.தமிழ்வாணன் |
| 19 | 23.06.2025 | சோளிங்கர் வடக்கு ஒன்றியம் | ஆயில் ஊராட்சி | தூத்துக்குடி சரத்பாலா |
| | | சோளிங்கர் வடக்கு ஒன்றியம் | சூரை ஊராட்சி | தூத்துக்குடி சரத்பாலா |
| 20, 21 | | அரக்கோணம் மேற்கு ஒன்றியம் | தண்டலம் | பழ.ராஜேந்திர பிரசாத் |
| 22 | | அரக்கோணம் மேற்கு ஒன்றியம் | கும்மினிப்பேட்டை | பழ.ராஜேந்திர பிரசாத் |
| 23 | 24.06.2025 | சோளிங்கர் நகரம் | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 24 | | சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் | பாராஞ்சி | கந்திலி கரிகாலன் |
| 25 | | சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் | சாலை | கந்திலி கரிகாலன் |
| 26 | 25.06.2025 | வாலாஜா நகரம் | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 27 | | ஆற்காடு கிழக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 28 | | அம்மூர் பேரூர் | அண்ணாசிலை அருகில் | கந்திலி கரிகாலன் |
| 29 | | வாலாஜா கிழக்கு ஒன்றியம் | சாத்தம்பாக்கம் | கந்திலி கரிகாலன் |
| 30 | | சோளிங்கர் மேற்கு ஒன்றியம் | கரடிக்குப்பம் | முரசொலி மூர்த்தி |
| 31 | | சோளிங்கர் மேற்கு ஒன்றியம் | கோவிந்தச்சேரி குப்பம் | முரசொலி மூர்த்தி |
| 32 | 26.06.2025 | நெமிலி கிழக்கு ஒன்றியம் | கணபதிபுரம், சேந்தமங்கலம். | எட்டயாபுரம் தமிழ்பிரியன் |
| 33 | 27.06.2025 | சோளிங்கர் மத்திய ஒன்றியம் | காட்ராம்பாக்கம் | முரசொலி மூர்த்தி |
| 34 | | சோளிங்கர் மத்திய ஒன்றியம் | வடகடபந்தாங்கல் | முரசொலி மூர்த்தி |



இராணிப்பேட்டை

நாள் : 17-06-2025



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஆலங்காடு ஊராட்சி, கீழப்பட்டி பகுதியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய அங்கன்வாடி கட்டடத்தினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 14.06.2025 அன்று திறந்து வைத்தார்.

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!**

# செம்பனார்கோயிலில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்!

## அமைச்சர்கள் கோவி.செழியன் – சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினர்!

மயிலாடுதுறை,ஜூன், 19-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் கொண்டத்தூர், பாடசாலை ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிகளுக் கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை உயர் கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து, பார்வையிட்டு பயனகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் கொண்டத்தூர், பாடசாலை ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிக ளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமிற்கு மாலட்ட வருவாய் அலுவலர் உமா மகேஸ்வரி தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும். பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகள், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் கொண்டத்தூர், பாடசாலை ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன், பிற்படுத்தப் பட்டோர்நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசுகையில் தமிழ் மொழியை பாதுகாக்க கூடிய முக்கிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.1938 இல் தொடங்கிய இந்த மொழிப்போர் இன்னும் நீடித்து கொண்டு தான் இருக்கிறதுதமிழ்நாடு முதலமைச்சர் தளபதி தான் இன்று தாய் மொழி தமிழை செம்மொழித் தமிழை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பாதுகாத்த தமிழை நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பாதுகாத்து வருகிறார்.

ஒன்றிய அரசாங்கம் நம்முடைய பிள்ளை களுக்கு கொடுக்க வேண்டிய ரூ 2150 கோடி கிட்ட கிட்டத் தட்ட 43 லட்சம் மாணவ மாணவிகள் பயன்பெறக் கூடிய நம் வரிப்பணத்தில் நமக்கு வழங்க வேண்டிய மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான்,புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான் அந்தத் தொகையை வழங்கப்படும் என்று ஆட்சி நடத்தக் கூடிய ஒன்றிய அரசாக உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமது தாய் மொழி தமிழை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்தான் காத்திருக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியில் 4 ஆண்டுகளுக்கு மேலாக பல பணிகளை, திட்டங்களை சிறப்பாக . நிறைவேற்றி நடைபெற்றுள்ளது. நமது மயிலாடுதுறை மாவட்டத்திற்கு பல்வேறு சிறப்பும், பெருமையும் உள்ளது. . குக்கிராம மக்களுக்கு தேவையான வசதிகளான, அதற்கான தீர்வுகளாக, கலைஞரின் கனவு இல்லம், 2001 க்கு முன்பு கட்டப்பட்ட வீடுகளின்; மராமத்து பணிக்கான திட்டத்தை தந்தவர். ரூ.2 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் புதிதாக வீடு வழங்கும் திட்டத்தை தந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மக்களுக்காக சேவைகளை வழங்கி வருபவர்.

இந்த முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு விரைவில் 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். நடைபெற்ற 16ம் தேதி நடைபெற்ற அரசு விழாவில், அனைத்து மாவட்டங்களிலும் துணை முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக்குழு சுழல்நிதி கடனுதவிகளை வழங்கினார்கள். நமது மயிலாடுதுறை மாவட்டத்தில் 836 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.54 கோடி மதிப்பில் கடனுதவிகள் வழங்கப்பட்டன. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி, அவர்களுக்கு பரிசுகளும் வழங்கியவர் நம் துணை முதலமைச்சர் அவர்கள். உலகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கி, உள்நாட்டு உற்பத்தி 9.69 சதவீதம் அதிகமான பொருளாதாரத்தை பெற்று தந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். பெண்களுக்கான திட்டங்கள், உயர்கல்விக்கான திட்டங்கள், அரசு கலை அறிவியல் கல்லூரிகள் போன்ற திட்டங்களை தந்தவர்இவ்வாறுபிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் .சிவ.வீ.மெய்யநாதன் . பேசினார்.

நிகழ்ச்சிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம். இளங்கோவன் ஜி.என்.ரவி. மாவடக் கழக துணை செயலாளர்கள் மு.ஞானவேலன். எஸ். செல்வமணி அலெக்சாண் ஒன்றிய கழக செய்லாளர் பி.எம்.அன்பழகன் ஏ. ஜி.ஜே. பிரபாகர் ,பஞ்சுகுமார், மலர்விழிநிருமாலாவன், செல்லசேதுரவிக்குமார், எம். அப்துல்மாலிக், ஞான, இயைநாதன், ஏ.ஆர்.ராஜா, சீர்காழி நகரக் கழக செயலாளர் ம. சுப்பராயன் முன்னாள் ஒன்றிய குழு மேலையூர் முத்து தேவேந்திரன், பொதுக்கு உறுப்பினர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், ஹர்ஷத், தத்தம் ஏ.வின்செண்ட் சுப நெடுஞ்செழியன், எஸ்.காந்தி, பேரூர் செயலாளர்கள் எம். அன்பு செழியன், முத்து ராஜா,

ஒன்றிய குழு முன்னாள் தலைவர்கள் தியாக.விஜஸ்வரன், ஜெய பிரகாஷ் க.சுரேஷ், மாவட்ட சார்பு அமைப்பாளர்கள் முத்துக்குபேரன். முருகன், தன்ராஜ், மாவட்ட அரசு வழக்கறிஞர் அருள்தாஸ், செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் பேருந்து நிலையத்தில், வட்டார போக்குவரத்துத் துறை சார்பாக, மினி பேருந்திற்கான புதிய விரிவான திட்டம் 2024 ன் கீழ், 15 வழித்தடங்களில், 13 மினி பேருந்துகள் இயக்கத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். உடன், வட்டார போக்குவரத்து அலுவலர் பிரபாகர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தமிழ் இன தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் நகர கழகத்தின் சார்பில் நகர செயலாளர் எஸ்.முருகானந்தம் தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் க.செல்வராஜ், தாராபுரம் மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் கே.கே.துரைசாமி, நகர்மன்ற தலைவர் கு. பாப்புகண்ணன் உள்பட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.